# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 87** **நாள்: 29.06.2018**

**தண்டையார்பேட்டை, தொற்றுநோய் மருத்துவமனையில் 2018–19ஆம் ஆண்டிற்கான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சிக்கு மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் 2018–2019 ஆம் ஆண்டிற்கான மருத்துவ இணையியல் படிப்பான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி (ANM) (40 இடங்கள்) தொடங்கப்பட உள்ளது. இப்பயிற்சிக்கு மாணவிகள் 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர், தொற்றுநோய் மருத்துவமனை எண்.187, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை–600081–ல் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 02.07.2018 அன்று முதல் 10.07.2018 வரை ரூ.50/– மட்டும் செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12.07.2018 மாலை 5 மணி வரை பெறப்படும். இதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**<u>வயது வரம்பு :</u> [17 வயதுக்குமேல் 32 வயதுக்குள் உள்ளவர்கள். (30.06.2018) தேதியின் படி)]**
**[ தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயது வரை (30.06.2018) தேதியின் படி)]**

மேலும், தகவல்களுக்கு 044–25912686, 25912687 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களை பெறலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**